மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம். இந்நிகழ்ச்சி 17—9—71-ல் நடந்தது.

(இ) நியமனக் குழு ஏற்பளித்த பட்டியலிலிருந்து ஆசிரியை ஒருவரின் பெயரை நீக்குமாறு ஊராட்சிக் குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டதற்கு ஊராட்சி ஒன்றிய பொறுப்பதிகாரி (கமிஷனர்) இணங்காததால் அவரை முனுசாமி என்ற ஒருவர் அடித்தார்.

(உ) காவேரிப்பாக்கம் காவல் நிலையத்தில் இ.பி.கோ. 147, 332, 323-வது பிரிவின் கீழ் 596/71-ஆம் குற்ற எண்ணில் பதிவு செய்யப்பட்ட வழக்கு, 25—12—71 புலனாகாத வழக்கு என்று தீர்மானிக்கப்பட்டது.

Explosion in a Restaurant at Madurai

* 252 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the **Chief Minister be pleased to state—**

(a) whether there was any explosion in any restaurant in Madurai about 23rd October, 1971 causing injuries to many persons; and

(b) if so, the details thereof?

மதுரையில் உள்ள சிற்றுண்டி விடுதியில் வெடி விபத்து

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் சிற்றுண்டி விடுதி எதிலாவது 1971 அக்டோபர் 23-ஆம் நாள் அளவில் வெடி விபத்து ஏதும் ஏற்பட்டு அதனால் பலர் காயமடைந்தனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) மதுரை நகரில் காமாட்சிபுரம் கிராமத்தில் உள்ள திரு. பெருமாள் தேவர் தமது வயல்களில் இருக்கும் பயிர்களை நாசம் செய்யும் வன விலங்குகளை அச்சுறுத்த வேண்டி போடிநாயக்கனூரைச் சேர்ந்த திரு. ராமு தேவர் என்பவரிடமிருந்து நான்கு வெங்காய வெடிகளை வாங்கினர். 23—10—71-ல் திரு. பெருமாள் தேவர், சிற்றுண்டி உண்பதற்காக மதுரையிலுள்ள தௌபீக் ஓட்டலுக்குச் சென்ற போது தம்முடன் இரண்டு வெடிகளை எடுத்துச் சென்றார். அங்கு அவை தற்செயலாகக் கீழேவிழுந்து வெடித்ததால் திரு. பெருமாள் தேவருக்கும், உணவு வழங்கும் வேலையாள் இருவருக்கும் அந்த ஓட்டலில் அச்சமயம்

சாப்பிட்டுக்கொண்டிருந்த மற்ருெருவக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டன. இது குறித்து சம்பந்தப்பட்டவர்களை, மதுரை இரண்டாவது துணை மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்து ஒவ்வொருவருக்கும் ரூ. 50 அபராதம் விதித்தார்.

Indian National Army

***253 Q.**—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any complaint has been received that there was impersonation in the grant of loan to the Ex-servicemen belonging to Indian National Army and Burma repatriates at Kandramanikkam, Tiruppattur taluk, Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

முன்னாள் தேசிய ராணுவ வீரர்கள்

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் கண்டரமாணிக்கத்தில் முன்னாள் தேசிய ராணுவ வீரர்கள் (I.N.A.) பர்மா அகதிகளுக்குக் கடன் மானியம் வழங்குவதில் ஆள் மாருட்டம் செய்ததின் காரணமாக புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதிய விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாளை 15—9—71 வரை நீட்டித்ததால், இராமநாதபுரத்திலுள்ள திருப்பத்தூர் தாலுக்காவிலிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். மாவட்ட ஆட்சியாளர், சுமார் 213 விண்ணப்பங்களைப் பரிசீலித்த போது பழிபாவத்திற்கு அஞ்சாதவர்கள் போலி இந்திய தேசிய இராணுவ சான்றிதழ்களை ஆதரவாகக் காட்டி விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத்தைத் திட்டமிட்டுப் பெற்றிருப்பர் என சந்தேகித்துள்ளார். ஆகையினால் இது குறித்து புலனாய்வுக்காக மண்டல காவல் துறை அதிகாரி (குற்றப் புலனாய்வுப் பகுதி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்கு ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில் புலனாய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS